தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

வைகாசி 16, விசு – திருவள்ளுவர் ஆண்டு 2032

2001 மே 30, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"நோய்எல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர்."

துன்பம் எல்லாம் துன்பம் செய்தவரையே சார்வன; ஆகையால் துன்பம் இல்லாமல் வாழ்தலை விரும்புகின்றவர் பிறர்க்குத் துன்பம் செய்யார்.

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி* (*) *இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

1. அறிவிப்புகள்

(அ) உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன் கைது பற்றி காவல் துறை செய்தி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சென்னை மாநகர காவல் துறை ஆணையரிடமிருந்து 30-5-2001 ஆம் நாளிட்ட 1160/எஸ்.பி.1/2001, என்ற கடிதத்தில் இன்று காலை 9-00 மணியளவில் கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:*

"I have the honour to inform you that Thiru B. Ranganathan, M.L.A., Purasawakkam Constituency, Tamil Maanila Congress Democratic Forum, was arrested today (30-5-2001) at 5-15 hours at his residence at No. 37, I Main Road, Jawahar Nagar, Chennai-82, in connection with a case in G-3 Kilpauk P.S. Crime No. 822/2001, u/s. 147, 148, 452, 341, 387, 307 & 506 IPC. Thiru B. Ranganathan was produced before the XIV Metropolitan Magistrate, Egmore and remanded to judicial custody for 15 days."